# ஜூலை 18, 2022 அன்று அவசரகால நிலைமைப் பிரகடனம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

**18 ஜூலை 2022, கொழும்பு, இலங்கை:** 17 ஜூலை 2022, திகதியிட்ட, அதிவிசேட வர்த்தமானி இல.2288/30 மூலம் மற்றுமொரு அவசர கால நிலைமை தொடர்பான விசேட வர்த்தமானிப் பிரகடனம் குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) அதன் மிகுந்த கரிசனையைத் தெரிவித்துக்கொள்கிறது. இது, ரணில் விக்கிரமசிங்க அவர்களினால், 15 ஜூலை 2022 அன்று புதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டதின் பின் விடுக்கப்பட்ட முதலாவது அவசரகால நிலைமைப் பிரகடனமாகவும், மற்றும் கடந்த நான்கு மாதங்களில் நாட்டில் பிறப்பிக்கப்பட்ட மூன்றாவது அவசரகாலநிலைமைப் பிரகடனமாகவும் அமைகிறது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த வருடம் முன்னதாக இரண்டு தடவையும், அவரது ஜனாதிபதித்துவத்தின் கீழ் மூன்று தடவையும், அவசரகால நிலைமையைப் பிரகடனப் படுத்தியிருந்தார்.

ஓர் அவசரகால நிலைமை அசாதாரண சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் மட்டுமே பிரகடனப்படுத்தப்பட முடியுமென மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவ்வாறானதொரு அவசரகால நிலைமை நிலவாத சந்தர்ப்பத்தில், பொதுமக்களின் மாற்றுக் கருத்துக்களை அடக்கியொடுக்கும் ஒரு வடிவமாகவே தொடர்ச்சியாகப் பதவிக்கு வந்த ஜனாதிபதிகளால் இவ்வதிகாரத் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு வந்ததை, மா.கொ.நி வருத்தத்துடன் வலியுறுத்திக் காட்டுகிறது. சாதாரண சட்டவாக்க வரையரைகளுக்கு அப்பால் சென்று, சட்டத்தை ஆக்குவதற்கு ஜனாதிபதியை அனுமதிக்கும் இந்த விசேட அதிகாரம், தங்களது சொந்த நலன்களைப் பாதுகாக்க முனைவதற்கு ஜனாதிபதிகளால் உபயோகிக்கப்படும் ஒரு தனிப்பட்ட கருவியாகவன்றி மிகவும் முக்கியமான சந்தர்ப்பங்களிற்கு மட்டுமே உபயோகிக்கப்படுவதற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். ஓர் அவசரகால நிலைமையை அமுல்படுத்துவதைத் தேவைப்படுத்தும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் இந்தத் தடவை அங்கு இருந்ததாக மா.கொ.நி நம்பவில்லையென்பதுடன், அதனைப் பிறப்பிப்பதற்கு அவசியமாக இருந்த நிலைமைகளைத் தெளிவுபடுத்துவதற்கு பதில் ஜனாதிபதியை அது கேட்டுக்கொள்கிறது. நம்பத்தகுந்த தெளிவுபடுத்தல்கள் இல்லாதவிடத்து, அவசரகால நிலைமையின் பிரகடனப்படுத்தல் மிகவும் வஞ்சகத்தனமானது, ஈற்றில் அது மாற்றுக் கருத்துக்களை அடக்கியொடுக்குவதை அர்த்தப்படுத்துகிறது என்பதையே அது சுட்டிக்காட்டுகிறது.

இலங்கை முன்னொருபோதும் இருந்திராத ஓர் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போதும் மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி மற்றும் மக்கள் தொகையின் ஒரு கணிசமான அளவினரால் அனுபவிக்கப்பட்டு வரும் பொருளாதார கஷ்டங்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை என்பவற்றின் மீது கவனம் செலுத்துவதற்கு அரசாங்கத்தின் முன்னுரிமை இருக்கும் போதான ஒரு சமயத்தில் மேற்சொன்ன நடவடிக்கை எவ்வகையிலும் எதிர்விளைவுளை ஏற்படுத்தும் தன்மை கொண்டது என்பதை மா.கொ.நி குறிப்பிட்டுக்கொள்கிறது. பிரஜைகளின் உரிமைகளை வழங்கி மற்றும் அவற்றைக் காப்பாற்றுவதற்கான அதன் முக்கிய பொறுப்பிலிருந்து தவறி, பதிலுக்கு அரசாங்கம் மற்றும் ஆட்சிமுறை என்பவற்றின் மீதான நம்பிக்கையை மேலும் சிதைக்கும் வகையில் எதேச்சாதிகாரமான நடவடிக்கைகளை தெரிவு

செய்கின்றமை துரதிர்ஷ்டமானது. அதனால், அவசரகால நிலைமைப் பிரகடனத்தை உடனடியாக நீக்கி மற்றும் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் மற்றும் இலங்கையில் ஜனநாயச் செயன்முறைகளைப் பேணுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு, பதில் ஜனாதிபதியை மா.கொ.நி இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகிறது.